நீலகிரி மாவட்டம் சார்பு நீதிமன்றத்தில் **2025**-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் **24**-ஆம் நாள் சாட்சியாகிய- என்பவரின் வாக்குமூலம் **1969**- ஆம் ஆண்டு **44** வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி**.** ரேகா**,** தலைமை எழுத்தர்/நிலை **2** பெஞ்ச் கிளார்க் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/ சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறது**.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | மதம் | : |
| தந்தை**.**/கணவர் பெயர் | : | ஜாதி | : |
| கிராமம் | : | தொழில் | : |
| தாலூக்கா | : | வயது | : |

---

**24.07.2025**

**(** துவங்கப்படும் நேரம் **- 12.20 AM)**

**(**முடிக்கப்பட்ட நேரம் **- 12.30 AM)**

**O.S. No.97/2015 (P.W.1)**

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் வாதியாவேன். எனது தரப்பு முதல் விசாரணையை பிரமாண பத்திரமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ளது எனது கையொப்பம் தான். அது நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. அதை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். 13.02.1968 ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் நகல் (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) அது வா**.**சா**.**ஆ**-1** ஆகும். 22.05.2013 ம் தேதியிட்ட தானபத்திரத்தின் நகல் (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) அது வா**.**சா**.**ஆ**-2** ஆகும். பட்டா எண்.816 ன் நகல் (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) அது வா**.**சா**.**ஆ**-3** ஆகும். 13.09.2013 ம் தேதியிட்ட துணை வட்டாட்சியரின் செயல் முறைகளின் நகல் (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) அது வா**.**சா**.**ஆ**-4** ஆகும். 19.07.2014 ம் தேதியன்று காவல்துறை கண்காணிப்பாளருக்கு அனுப்பட்ட புகாரின் உண்மை நகல் (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) அது வா**.**சா**.**ஆ**-5** ஆகும். எனது வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா**.**சா**.**ஆ**-6** ஆகும். அந்த அறிவிப்பினை பிரதிவாதிகள் பெற்று கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை (2 எண்ணிக்கைகள்) வா**.**சா**.**ஆ**-7** ஆகும். ஆகியவற்றை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்தினை வாடகைக்கு விட்டிருந்தால் தற்போது என்ன வாடகை அதில் இருந்து வரும் என்றால் ரூ.30,000/- வரும். வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என பிராத்திக்கிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.